සියලුම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education, Southern Province**

දෙවන වාර පරීක්ෂණය - 2021
இரண்டாந் தவணைப் பரீட்சை – 2021

| | | |
|---|---|---|
| 10 ශ්‍රේණිය<br>தரம் 10 | දෙමළ - I<br>தமிழ் மொழியும் இலக்கியமும்- III | පැය 02 යි<br>02 மணித்தியாலம் |

**கவனிக்க:**

- அறிவுறுத்தல்களுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

---

(01) சுருக்கமான விடை தருக.

(i) “தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம் …. “
(அ) மண்டுகம் என்பது எதனைக் குறிக்கிறது?
(ஆ) பாடலில் குளிர்ச்சி என்ற கருத்தைத் தரும் சொல்லைக் குறிப்பிடுக.

(ii) “எமன் கையில் பட்டபாடு பட்டேன் என்கிறார் …”
(அ) இக்கூற்றைக் கூறியவர் யார்?
(ஆ) இச்சிறுகதையின் ஆசிரியர் யார்?

(iii) கார்தட் டியபஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினும் தட்டு ….. “
(அ) “கார்தட்டிய” என்பதன் கருத்தைக் கூறுக.
(ஆ) இபப்பாடல் யாரைப் புகழ்ந்து பாட்டதாகும்.

(iv) “சூழமேதி யிறங்குத் துறையிற்
சொரியும் பாலைப் பருகிய வாளை… “
(அ) “மேதி” என்பதன் கருத்து யாது?
(ஆ) இங்கு அவற்றின் இறங்குமிடம் எனும் கருத்தைத் தரும் சொல் எது?

(v) “ இந்த பைல் இஞ்ச எப்பிடி வந்தது?” என்றேன்
(அ) இக்கூற்று யாருக்கு கூறப்பட்டதாகும்?
(ஆ) “பைல் “ என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவம் எது?

(vi) "பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்
புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன்"

(அ) "புலன் " என்பதனூடாக குறிப்பிடப்படுபவற்றுள் இரண்டினை குறிப்பிடுக.

(ஆ) "புத்த ஜோதி வதனம் " என்பதில் கையாளப்பட்டுள்ள அணி எது?

(vii) " மாகம டங்கலும் மால்விடை யும்பொன்
னாகமும் நாகமும் நாண நடந்தார்"

(அ) இவ்வடிகளில் பெருமைமிக்க ஆண் சிங்கம் எனும் கருத்தைத் தரும் சொல்லைக் குறிப்பிடுக.

(ஆ) இவ்வாறு பெருமைப்படுத்தப்படுபவரின் பெயர் யாது?

(viii) "தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
சுழலக் காண்பது பூந்தயிர் மத்து,..."

(அ) "பூந்தயிர் " என்பதன் கருத்து யாது?

(ஆ) இவ்வடிகள் எந்நாட்டின் சிறப்புப் பற்றிக் கூறுகிறது?

(ix) "அதனுடைய பார்வை எனக்கு துண்டாய்ப் பிடிக்கவில்லை அது இருந்த விதமும் தோற்றமும் வெறுப்பைக் கூட்டியது"

(அ) இச்சிறுகதைத் தொகுப்பு நூல் எது?

(ஆ) இச்சிகதை ஆசிரியருக்கு எதனுடைய பார்வை துண்டாய்ப் பிடிக்கவில்லை எனக் கூறுகிறார்.

(x) நீதிப் பாடல் என்றால் என்ன,?

(2x10=20 புள்ளிகள்)

(02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) "தண்டா மரையினுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம்
வண்டோ கானத் திடையிலிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே "

(அ) இங்கு அறிவற்றோரின் செயலுக்கு உவமானமாக் கூறப்படும் விடயம் யாது?

(ஆ) இப்பாடல் இடம்பெறும் இலக்கியம் யாது?

(ii) சூழ மாய வுலகினிற் காணுறுந்

தோற்றம் யாவையும் மானத மாகுமால்

ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்

அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்

தாழு முள்ளத்தர், சோர்வினர், ஆடுபோல்

தாவித் தாவிப் பல பொருள் நாடுவோர்

வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்,

விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

(அ) பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவர் தாம் விரும்பியவற்றை அடைய இயலாமல் போவதற்கான காரணங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.

(ஆ) ‘‘ஆடு போல் தாவித்தாவிப் பல பொருள் நாடுவோர் ‘‘ என்பதில் உள்ள உவமான உவமேயங்களை எடுத்துக் காட்டுக.

(iii) கணக்காய ரில்லாத வூரும்பிணக்கறுக்கு

மூத்தோரை யில்லாத வவைக்களனும் - பாத்துண்ணுந்

தன்னையிலான ரயலிருப்பு மின்மூன்று

நன்மை பயத்த லில

(அ) நன்மை பயக்காத மூன்று விடயங்களும் எவை?

(ஆ) பாடலில் ஆசிரியர் யார்? இடம்பெற்ற நூல் எது?

(iv) புலவர்களுடைய பாட்டுக்களில் அவர்கள் கருதாத கருத்துக்கள் அமைகிறதுண்டு, கம்பருடைய சில அடிகளில் அன்றைக்கு அப்படிப்பட்ட பொருள் அமைந்து கிடந்தது. விலகு பிள்ளை என்று வழக்கமாக சொல்லுவதைச் சொல்லுமுன்னமே விசுவநாதபிள்ளை மேடையில் விலகி இடம்கொடுத்தார். நூவலர் அவர்களின் நிலைமை கம்பீரமான தோற்றம், வீறுகொண்ட பார்வை, எண்ணங்களின் வேகம், அவற்றை வருணிக்க அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை. அது கிடக்க எ டுத்துக் கொண்டு வா, தந்தி தபாற் கட்டுக்களை என்றார் நாவலர் அவர்கள். எல்லோரும் பிரமித்துப் போனார்கள்.

(அ) நாவலர் அவர்களின் நிலை பற்றி எவ்வாறு கூறப்பட்டுள்ளது.

(ஆ) ‘‘அது கிடக்க எடுத்துக் கொண்டு வா தந்தி தபாற் கட்டுக்களை‘‘ இக்கூற்றை கூறியவர் யார்?

(v) உருக்கி எடுத்த இரும்பினால் செய்த ‘‘ரெமிங்டன் ‘‘ தட்டெழுத்து பொறியில் நான் ஆரம்பகாலத் தீட்சை பெற்றவன். ஆதைத் தூக்க இரண்டு பேரும் வைக்க நாலு பேரும் வேணும் நகல் எடுக்கும் மெசின்கள் வருவதற்கு முன்னரான ஒரு காலம் அது, ஏழு கார்பன் தாள் வைத்து, கைகளை தலை உயரத்துக்கு தூக்கி, மூச்சைப் பிடித்து, தேடிக் குத்தி டைப் செய்வதில் நான் ஒரு விண்ணன் என்று பேர் வாங்கிவன். இப்படி ஒரு ஆழ்ந்த பரவசத்தோடு நான் தட்டெழுத்து லீலைகள் செய்யும் போது அம்மி பொளிவது போல ஒரு விதமான சத்தம் வரும் என்று சொல்வார்கள்.

(அ) ‘‘டைப் செய்வதில் நான் ஒரு விண்ணன்’’ ஏன்று தொடர் உணர்த்தும் பொருளைத் தருக.

(ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள உவமை அணியை எடுத்துக் காட்டுக.

(4x5=20 புள்ளிகள்)

(03) “நாவலர் எழுந்தார் “ எனும் பாடத்தில்

(அ) கூட்ட நடைமுறைகளை நாவலர் அவதானித்த விதம்

(ஆ) கட்டுரையாசிரியர் கையாண்ட உத்திகள் என்பவற்றை விளக்குக.

**அல்லது**

பாரதியார் சுயசரிதை எனும் பாடத்தில்,

(அ) பாரதியார் காத்திருந்த விதம்

(ஆ) தாம் விரும்பியவற்றை அடைவதற்கு முயற்சிக்கும் விதத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டுக.

(15 புள்ளிகள்)

(04) குற்றாலக் குறவஞ்சியில்,

(அ) குற்றாலநாதரின் சிறப்பு

(ஆ) மலை வளம்

என்பன எடுத்தாளப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

கம்பியூட்டர் எனும் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு

(அ) கம்பியூட்டர் வாங்க முடிவெடுத்தன் காரணம்

(ஆ) தலைப்பின் பொருத்தப்பாடு

என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

- 5,6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.

(05) நீதிப்பாடல்களில்

(அ) இனியவை நாற்பது,

(ஆ) முதுமொழி வெண்பா என்ற பாடல்களில் வாழ்வை செம்மைப்படுத்தும் விதம் எடுத்தாளப்படுமாற்றினை எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

(06) தனிப்பாடல்களில்,

காளமேகப் புலவர் யைகாண்டுள்ள சிலேடை பற்றி தெளிவாக எடுத்துக் காட்டுக. (10 புள்ளிகள்)

(07) புகழேந்திப் புலவர் பாடலில்,

(அ) நாட்டு வளம்

(ஆ) பெண்ணின் ஏக்கம் என்பன எடுத்தாளப்பட்டுள்ள விதத்தை தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

*******